**செய்தி வெளியீடு எண்: 150** **நாள் : 02.03.2016**

<u>செய்தி வெளியீடு</u>

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மத நல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்கப்படுத்தும் வகையில், இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆண்டுதோறும் சர்வதேச மகளிர் தினத்தன்று "அவ்வையார் விருது" என்னும் உயரிய விருதினை வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2012-ஆம் ஆண்டு உத்தரவிட்டார்கள். இந்த விருது பெறுபவருக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம், 8 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் சால்வை ஆகியவை வழங்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதன்படி 2012-ஆம் ஆண்டு முதல் "அவ்வையார் விருது" வழங்கப்பட்டு வருகிறது.

2016-ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருதுக்கு, அரசு மனநல மருத்துவ நிலையத்தின் தலைவராக பணியாற்றி ஓய்வு பெற்றவரும், SCARF (Schizophernia Care and Research Foundation) தொண்டு நிறுவனத்தின் நிறுவனர்-ஆலோசகர் டாக்டர் M. சாரதா மேனன் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிந்தெடுத்துள்ளார்கள். டாக்டர் சாரதா மேனன் அவர்கள் மனநலம் தொடர்பாக சிறந்த மருத்துவப் பணியாற்றியுள்ளார். இவர் மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் மற்றும் மறுவாழ்விற்காக SCARF என்ற தொண்டு நிறுவனத்தினை நிறுவியவர் ஆவார். இந்த ஆண்டுக்கான அவ்வையார் விருதுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் சாரதா மேனன் அவர்களுக்கு அவ்வையார் விருதுடன் ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, 8 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் சால்வை ஆகியவை வழங்கப்படும்.

*****

**வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.**
**நாள்:- 2.3.2016.**